SRI M. NARAYANA KURUP :—" Sir, in connexion with the visit of such missions do the Central Government meet a portion of the expenses? "

THE HON. SRI C. SUBRAMANIAM :—" Yes, Sir. Almost the entire expenditure is met by the Central Government. These are incidental expenses. These are small amounts for which we did not want to make a claim on the Central Government."

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Questions 1966 and 1967 may be taken up together, Sir."

MR. SPEAKER :—" Yes."

Textile Tripartite Enquiry Committee.

1966 *Q.*—SRI N. K. PALANISAMY : Will the Hon. the Minister for Agriculture be pleased to state whether any circulars were sent to Labour Unions as well as owners of Textile Mills in the State in 1954 to elicit opinion on certain recommendations of the Textile Tripartite Enquiry Committee of 1953?

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" Yes, Sir."

Recommendations of the Tripartite Enquiry Committee.

* 1967 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Agriculture be pleased to state—

(*a*) whether it is a fact that the Labour Commissioner circulated some of the recommendations of the Tripartite Enquiry Committee to the Textile Mill-owners and called for their views ;

(*b*) how many mill-owners replied; and

(*c*) the nature of replies received?.

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" (*a*) Yes, Sir.

" (*b*) Sixty-three.

" (*c*) All the 63 managements replied that they would be unable to implement the recommendations of the Textile Tripartite Enquiry Committee as they would throw additional financial burden on the industry resulting in the closure of their establishments."

SRI N. K. PALANISAMY :—" இம்மாதிரி அபிப்பிராயங்களை அனுப்பி கிட்டத்தட்ட ஒரு வருஷத்துக்கு மேல் ஆகிவிட்டது. ஆனால் இது வரையிலும் அதைப்பற்றி சர்க்கார் ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தொழிலாளிகளுக்கு நன்மை செய்ய வேண்டுமென்ற அபிப்பிராயம் சர்க்காருக்கு இல்லை என்பதைத் தான் இது காட்டுகிறது. முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசுப் பிரகாரம், ஒரு ரீஜனல் கமிட்டியை நியமித்து அதன் சிபார்சுப்படி இன்றைய தினம் ராஜ்யம் பூராவும் இருக்கும் தொழிலாளிகளின் மீது திணிக்கப்பட்டிருக்கும் வேலைப் பளுவைக் குறைக்க வேண்டும். இது தான் முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசு. அதன்படி ரீஜனல் கமிட்டியை நியமித்து எற்கனவே அதிகமாக இருக்கும் தொழிலாளிகளின் வேலைப் பளுவைக் குறைக்க சர்க்கார் யோசிப்பார்களா ? "

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" இது பற்றிய நிலைமையை நான் முன்பே நன்கு விளக்கியிருக்கிறேன். இந்த சிபாரிசுகளை நாம் சட்டபூர்வமாக அமுலுக்குக் கொண்டுவர முடியாது. இது பற்றிய பிரச்னைகளைக் கிளப்பினால் அப்பொழுது அதைப்

6th August 1955]

பற்றி நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாமென்று சொல்லியிருக்கிறேன். மேலும் தொழிலாளிகளும் மானேஜ்மெண்டும் சேர்ந்து பேசி ஒரு முடிவுக்கு வருவது நலம் என்று சொல்லியிருக்கிறேன். இது விஷயமாக கனம் அங்கத்தினருக்குத் தெரியாமல் இருக்கலாம். மானேஜ்மெண்டுப் பிரதிநிதிகளும் தொழிலாளிகளுடைய பிரதிநிதிகளும் சேர்ந்து பேசிக் கொண்டு தான் இருக்கிறார்கள். நேற்றுக் கூட அவர்கள் இங்கு வந்து என் முன்னிலையில் பேசினார்கள். ஏதோ சில நடவடிக்கைகள் எடுப்பதாகச் சொல்லிப் போயிருக்கிறார்கள்.''

SRI M. PALANIYANDI :—" நேற்றோ அல்லது நேற்று முன் தினமோ மானேஜ்மெண்டுப் பிரதிநிதிகளையும் தொழிலாளிகளுடைய பிரதிநிதிகளையும் கூட்டிப் பேசியதாகத் தெரிகிறது. அதற்காக நான் மந்திரி அவர்களைச் சிலாகிக்கிறேன். இருந்தாலும் கூட இந்த நடவடிக்கைகளினால் இந்த சிபாரிசுகளை அவர்கள் அமுல் நடத்த ஒத்துக்கொண்டிருக்கிறார்களா என்று தெரியுமா ? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" எது பற்றிப் பேசுவது என்று அவர்களை நிர்ணயித்துச் சொல்லும்படியாக நான் அவர்களிடம் சொல்லியிருக்கிறேன். கோயம்பத்தூருக்குப் போய் பிறகு தெரிவிப்பதாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள்.''

SRI S. RAMALINGAM :—" நேற்று கோயம்பத்தூர் ஜில்லாவிலுள்ள மானேஜ்மெண்டுப் பிரதிநிதிகளையும் தொழிலாளர்களுடைய பிரதிநிதிகளையும் கூட்டி கனம் மந்திரி அவாகள் பேசியிருக்கிறார்கள். கோயம்பத்தூர் தவிர இதரப் பகுதிகளில் இருக்கக்கூடிய முதலாளிகளின் பிரதிநிதிகளையும் தொழிலாளிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட ஒரு மகாநாட்டைக் கூட்டி முக்கூட்டுக் கமிட்டியின் சிபாரிசுகளை அமுல் நடத்தும்படி செய்ய சர்க்கார் யோசிப்பார்களா ? ''

THE HON. SRI M. BHAKTAVATSALAM :—" கோயம்பத்தூரிலுள்ள தொழிலாளிகளின் பிரதிநிதிகளும் முதலாளிகளின் பிரதிநிதிகளும் இதைப் பற்றிப் பேச விரும்பியதால் நான் அவர்களை அழைத்தேன். இந்தப் பிரதேசத்தில் பிரச்னை சரியானபடி தீர்ந்தால் மற்றப் பிராந்தியங்களிலும் இப்பிரச்னையை எடுத்துக்கொள்ளலாம்.''

Share capital for the formation of Co-operative Societies.

*1968 Q.—SRI R. S. ARUMUGAM: Will the Hon. the Minister for Health be pleased to state—

(a) whether the Government have by rule or orders fixed the amount of share capital required to be remitted towards the formation of a co-operative society; and if so, what it is; and 8-50 a.m.

(b) whether there is any concession for Harijan Co-operative Societies regarding the prescribed limit of share capital?

THE HON. SRI A. B. SHETTY :—" (a) No, Sir. But according to Registrar's executive instructions, multi-purpose co-operative societies can be registered with a minimum share capital of Rs. 500 or even less in Community Project and National Extension Service area. In other areas, such societies can be registered only when a minimum share capital of Rs. 1,000. If they do not undertake non-credit activities they can be registered with a share capital of Rs. 500. A minimum share capital of Rs. 2,000 in the case of small consumer stores and of Rs. 5,000 in the case of urban and semi urban stores is insisted upon. The minimum share capital required for registering weavers' co-operative is Rs. 1,000.

" (b) No, Sir.''